

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பு அணிகளின் மாவட்ட நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம். கடலூர் துறைமுகம், ட்ரிபிள் எம் மண்டபத்தில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு எழுச்சி உரையாற்றினார். கூட்டத்தில் துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு, கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்து வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சரும் உறுப்பினருமான, கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கடலூர், கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் எம்.ஆர்.கே. கல்வி குழுமத்தின் தலைவர் எம்.ஆர்.கே.பி. கதிரவன் வெள்ளி செங்கோல் வழங்கினார்கள். உடன் கழக இளைஞரணி துணைச் செயலாளர் அப்துல் மாலிக், கடலூர் மாநகரச் செயலாளர் கே.எஸ்.ராஜா மற்றும் கழக மாவட்ட அமைப்பாளர்களும் உடன் இருந்தனர்.

### விமானக் கட்டண உயர்வால் பாதிக்கப்படும்

# சுற்றுலாத்துறையை மீட்க ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

## கழக நாடாளுமன்றக் குழு துணைத் தலைவர் தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!

புதுடெல்லி, நவ.27-

விமானக் கட்டணம் உயர்வு போன்ற காரணங்களால் பாதிக்கப்படும் உள்நாட்டுச் சுற்றுலாவை மீட்கவும், விமானக் கட்டண நிர்ணயத்தில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யவும் ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன என்பன போன்ற பல்வேறு கேள்விகளை ஒன்றிய சுற்றுலாத்துறை அமைச்சகத்திடம் நாடாளுமன்றத்தில் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவர் தயாநிதி மாறன் வினவினார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு : -

உள்நாட்டு விமானங்களின் கட்டணம் அதிகரித்து வருவதால் சுற்றுலாத்துறையில் ஏற்பட்டுவரும் பாதிப்புகள் குறித்து ஒன்றிய அரசு சமீபத்தில் ஏதேனும் ஆய்வு மேற்கொண்டதா என்றும் அப்படியானால் அதன் விவரங்களைத் தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார்.



உள்நாட்டுச் சுற்றுலா விமானக் கட்டணம், பயணிகளுக்கு குறைந்த விலையில் கிடைப்பதையும், வெளிப்படையான விலை நிர்ணயத்தையும் உறுதி செய்ய, விமான நிறுவனங்கள் மற்றும் ஒழுங்குமுறை ஆணையங்களுடனும் இணைந்து, ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன என்று கேள்வி எழுப்பினார்.

சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கைக் குறைவு காரணமாக பாதிக்கப்பட்டு வரும் ஹோட்டல், உணவகங்கள், சுற்றுலா அமைப்பாளர்களின் வர்த்தகம் உள்ளிட்ட உள்ளூர்ச் சுற்றுலா வணிகத்தில் ஏற்பட்டு வரும் பாதிப்புகள் குறித்து ஒன்றிய அரசு ஏதேனும் ஆய்வு மேற்கொண்டுள்ளதா எனக் கேள்வி எழுப்பினார்.

உள்நாட்டுச் சுற்றுலாவுக்கான விமானப் பயணக் கட்டணம் அதிகரிப்பதை, மானியம் அல்லது ஊக்கத்தொகை போன்ற திட்டங்கள் மூலம் சரிசெய்ய ஒன்றிய சுற்றுலாத்துறை அமைச்சகமும், விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சகமும் இணைந்து செயல்படும் திட்டம் உள்ளதா எனக் கேள்வி எழுப்பினார்.

விமானக் கட்டணம் போன்ற பயணச் செலவுகளின் மாறுபாடுகளால், உள்நாட்டுச் சுற்றுலாத்துறை பெரிதும் பாதிக்காமல், நிலைத்த வளர்ச்சியைப் பெறுவதற்கான ஒன்றிய அரசின் நீண்டகாலத் திட்டங்கள் என்ன என தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

### துணை முதல்வர் பிறந்தநாள்! கழகக் கொடியேற்றி – நல உதவிகள் வழங்கி

# கடலூர் கிழக்கு மாவட்டத்தில் எளியோர் எழுச்சிநாளாக கொண்டாடுவீர்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!

கடலூர், நவ. 27-

இன்று (27.11.2024 புதன்கிழமை) துணை முதலமைச்சர் - கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் எளியோர்களின் எழுச்சி நாளாக சிறப்பாக கொண்டாட வேண்டும் என வேளாண்மை மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

இன்று (27.11.2024 - புதன்கிழமை) துணை முதலமைச்சர் - கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கடலூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள மாநகராட்சி, ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர், ஊராட்சி, வட்டம், வார்டு, கிளைகள் தோறும் 395 ஊராட்சி பகுதிகளிலும், 267 வார்டுகளிலும், மொத்தம் பகுதிகளில் 662 இடங்களில் கழக கொடியேற்றி, நலத்திட்ட உதவிகள் மற்றும் பெண்களுக்கான கோளப் போட்டிகள், இளைஞர்களுக்கு விளையாட்டு போட்டிகள், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பள்ளி உபகரணங்கள் வழங்கியும், மருத்துவ முகாம்கள் நடத்தியும், சிறப்பாக கொண்டாட வேண்டும். மேற்கண்ட நிகழ்ச்சிகளில் சம்பந்தபட்ட இடங்களில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகி



கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாநகர மேயர், ஊராட்சி ஒன்றிய குழு தலைவர், மண்டலக்குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக் குழு உறுப்பினர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், மற்றும் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (பி.எல்.ஏ.2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (பி.எல்.சி.) மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

### நாமக்கல் – மல்ல சமுத்திரத்தில் ‘அரிசன் காலனி’ எனும் பெயரில் இருந்த

# அரசு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி - மல்லசமுத்திரம் கிழக்கு

## பெயர் மாற்றத்திற்கான அரசாணையை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்கினார்!

நாமக்கல், நவ.27-

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர். அன்பில் மகேஸ் பொய்யாமொழி நாமக்கல் மாவட்டம் மல்லசமுத்திரத்தில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி ஒன்று ‘அரிசன் காலனி’ என்ற பெயரில் இருந்ததை மாற்றம் செய்ய வேண்டும் எனும் ஊர் மக்களின் கோரிக்கையை ஏற்று பள்ளி பெயர் பலகையில் இருந்த ‘அரிசன் காலனி’ என்பதை மாற்றினார்

மேலும் “ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, மல்லசமுத்திரம் கிழக்கு” என பெயர் மாற்றம் செய்யப் பட்டதற்கான அரசாணையை பள்ளியின் தலை மை ஆசிரியரிடம் வழங்கி, இதற்காக போராடிய ஊர் பெரியவர் கணேசன் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து மகிழ்ந்தார்.

இக்கோரிக்கையை அரசின் கவனத்திற்கு எடுத்துச் சென்ற வழக்கறிஞர் ஜி.அன்பழகன் ‘ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி மல்லசமுத்திரம் கிழக்கு’ எனப் பெயர் மாற்றம் செய்யப் பட்டதை தெரிவித்தார்.

திடீரென்று மல்லசமுத்திரம் கிராமத்திற்கு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் வருகை தந்ததால் ஊர்மக்களும், ஆசிரியர்களும் ஒன்று கூடினார்கள். தங்களின் கோரிக்கையை நிறைவேற்ற நேரடியாக வந்ததை அறிந்து பள்ளிக் கல்வித் துறை அமைச்சருக்கு நன்றி தெரிவித்தார்கள். இதுதொடர்பாக தனது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ‘கல்வி மட்டுமே சமத்துவம் மலரச் செய்யும் மிகப்பெரிய ஆயுதம்’ என கலைஞரின் வரிகளைக் குறிப்பிட்டுள்ளார்.



வன்னியர் நலவாரிய உறுப்பினராக நியமிக்கப்பட்டதையொட்டி விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா கழகத் துணைப் பொதுச் செயலாளர் – வனத்துறை அமைச்சர் க.பொன்முடி, மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதமசிகாமணி ஆகியோரிடம் வாழ்த்துப் பெற்றார்.

# நீடூழி நீடூழி நெடும்புகழில் வாழ்க!



உருக்கியபொன் போன்றெழுந்தான்
ஒளிப்பரிதி!... இருள்
ஓட்டவந்தான்! தீட்டவந்தான்
வெளிச்சவிதி!
திருக்குவளை வழியில்வந்தத்
தமிழ்க்குருதி!... இளந்
திராவிடர்க்குத் தலைமைதாங்கும்
உதயநிதி!

சேப்பாக்கம் என்பதொரு
சிறுபகுதி!... எட்டுத்
திசைகளுமே தமிழ்நாட்டில்
இவன்தொகுதி!
வாய்ப்பாக நாடு,மொழி
இனம்கருதி... புது
வரலாறு படைத்திடுவான்
இதுஉறுதி!

இனிஒரு புதுவிதி எழுதவந்தான்!
இளைஞர்கள் இதயங்கள் குளிரவந்தான்!
இனிமையில் கனிவுடன் பழகவந்தான்!
எளியவர் மனங்களைக் கவரவந்தான்!

எடுபிடி அடிமைகள் நடுங்கவந்தான்!
எதிர்வரும் பகைவர்கள் ஒடுங்கவந்தான்!
தடைகளும் உடைபட முழங்கவந்தான்!
தமிழின விடியலை வழங்கவந்தான்!

இறுகிய விலங்குகள் உடைக்கவந்தான்!
எல்லோர்க்கும் எல்லாம் கிடைக்கவந்தான்!
வறியவர் துயரங்கள் துடைக்கவந்தான்!
வளமிகு தமிழகம் படைக்கவந்தான்!

களத்தினில் உரிமையை நாட்டவந்தான்!
கழகம்என் உயிர்எனக் காட்டவந்தான்!
“தளபதி” பெருமையைக் கூட்டவந்தான்!
தாய்மொழி உணர்வை ஊட்டவந்தான்!

இருவண்ணக் கொடிகளை ஏற்றவந்தான்!
எது?நம் இலக்கெனச் சாற்றவந்தான்!
அரசியல் பணிகளை ஆற்றவந்தான்!
“ஆரிய மாயை”யை மாற்றவந்தான்!

கனவுகள் நனவாய் ஆக்கவந்தான்!
காலத்தின் கொடைகளை மீட்கவந்தான்!
சனாதன இழிவைப் போக்கவந்தான்!
“சமூக நீதி”யைக் காக்கவந்தான்!

அன்னைதுர்கா ஈன்றெடுத்த
அன்புமகன் வாழ்க!
“அன்பகத்தை” வழிநடத்தும்
அறிவுமகன் வாழ்க!
தன்னைவென்று தரணிவெல்ல
வந்தமகன் வாழ்க!
தலைவர்,எங்கள் “தளபதி”யின்
கொள்கைமகன் வாழ்க!

ஆரியத்தை வேரறுக்கும்
சேரன்இவன் வாழ்க!
அழகுதமிழ்ப் பாண்டியனாம்
மாறன்இவன் வாழ்க!
தீரம்கொண்டு தினவெடுக்கும்
வீரன்இவன் வாழ்க!
“திருக்குவளைச் சோழனுக்கு”ப்
பேரன்இவன் வாழ்க!

இரக்கத்தில் அருட்குணத்தின்
எல்லைஇவன் வாழ்க!
இனப்பகைவர் சொப்பனத்தில்
தொல்லைஇவன் வாழ்க!
சிரிக்கின்ற பூஞ்சிரிப்பில்
முல்லைஇவன் வாழ்க!
சேப்பாக்கம் தொகுதி,செல்லப்
பிள்ளைஇவன் வாழ்க!

இலட்சியத்தில் உறுதிகொண்ட
இனமறவர் வாழ்க!
எட்டுக்கோடித் தமிழர்களின்
துணைமுதல்வர் வாழ்க!
மலைச்சிகரம் போலுயர்ந்த
நெடும்புகழில் வாழ்க!
வாழ்க!வருந் தலைமுறையின்
இளந்தலைவர் வாழ்க!



... கவிச்சுடர்
**கவிதைப்பித்தன்**



உள்ளாட்சி தினத்தையொட்டி திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஊராட்சி ஒன்றியம் வெண்மந்தை ஊராட்சி சபைக் கூட்டம் 23.11.2024 அன்று ஊராட்சி மன்றத் தலைவர் ஜெ.சிவா தலைமையில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளராக ஆரணி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தரணிவேந்தன் கலந்துகொண்டு சிறப்பித்தார். வட்டாட்சியர் இரா. பொன்னுசாமி முன்னிலை வகித்தார். வட்டார ஊராட்சி அலுவலர்கள் டி.பிரபாகரன், பி.பரணிதரன், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் பி.பத்மாவதி பெருமாள், மன்ற உறுப்பினர்கள் ஏ.குப்பு, திருமதி. கோ.ராஜேஸ்வரி, திருமதி, கே. தேவி, வந்தவாசி ஒன்றியச் செயலாளர் கே.ஆர்.பி.பழனி, ஆரியாத்தூர் சி.ஆர்.பெருமாள் மற்றும் எம்.சி.சந்திரன், பொதுக்குழு உறுப்பினர் கீழச்செம்மேடு நந்தகோபால், சரவணன், கிளைச் செயாளர்கள் நாராயணன், ஜெ.கண்ணன் உள்பட பலர் பங்கேற்றனர்.